**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 317/2024**

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வள்ளியம்மை | தொழில் | |
| க/பெ | தேவநாதன் | வயது | |
| ஊர் | | தேதி | 05.11.2025 |
| மாவட்டம்: | | | |

இன்று (05.11.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**2,3 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

இந்த வழக்கில் சுபஸ்ரீ என்பவரது காப்பாளர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. சுபஸ்ரீ என்பவருக்கு தற்போது என்ன வயது இருக்கும் என்றால் 17 வயதாகிறது. நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கிராம உதவியாளராக பணி செய்து வருகிறேன். எனக்கு சுபஸ்ரீ என்பவர் ஒரே மகளா என்றால் இல்லை ஒரு மகன் இருக்கிறார். 1வது பிரதிவாதிக்கும் எனக்கும் எப்போது பழக்க வழக்கம் ஏற்பட்டது என்று சொன்னால் 2007 ம் வருடம் ஏற்பட்டது. எனக்கு 1வது பிரதிவாதிக்கு ஏற்கனவே திருமணம் நடந்துள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கு திருமணம் முடிந்துள்ளது என்பதும் குழந்தைகள் உள்ளனர் என்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்று சொன்னால் 2009 ம் வருடம் தெரிய வந்தது. வாதி எந்த ஊரில் எந்த தேதியில் பிறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 22.08.2008 ம் தேதி வளவனூர் அரசு பொது மருத்துவமனையில் பிறந்தார். நான் மடவிளாகம் என்ற ஊரில் பிறந்தேன். 1வது பிரதிவாதியுடன் பழக்க வழக்கம் ஏற்படும் முன்பு நான் திருமணம் ஆனவரா ஆகாதவரா என்றால் திருமணம் ஆனவர்.நான் இளவர் சுபஸ்ரீ என்பவருக்கு பாகம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. நான் எனது முதல் திருமண பந்தத்தில் இருந்து முறையாக விவாகரத்து பெற்றுள்ளேனா அல்லது பிரிந்து

வாழ்ந்துவருகிறேனா என்றால் பிரிந்து வாழ்ந்து வருகின்றேன். நான் சட்டப்படியான விவாகரத்தை நீதிமன்றத்திலிருந்து பெறவில்லை என்றால் சரி. 1வது பிரதிவாதி, 3வது பிரதிவாதியிடம் இருந்து முறையாக விவாகரத்து பெறவில்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 1வது பிரதிவாதி, 3 வது பிரதிவாதியிடம் இருந்து முறையாக விவாகரத்து பெறவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. 2வது பிரதிவாதி இளவராக இருந்த சமயத்தில் 3வது பிரதிவாதி 1வது பிரதிவாதி பேரில் வழக்குதாக்கல் செய்யப்பட்டு அதில் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதனை தொடர்ந்து இறுதிநிலை தீர்ப்பாணை பெறப்பட்டு சொத்தினை ஒப்புதல் பெற்றுவிட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் நான் வேலை செய்யும் அலுவலகத்தில் என்னை வேலையிலிருந்து வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்று மனு கொடுத்து வந்ததாலும் மேலும் என்னையும் எனது பிள்ளைகளையும் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாலும் நான் 1வது பிரதிவாதி ஊரில் சென்று விசாரணை செய்த போது தான் 1வது பிரதிவாதி பற்றியும் 2, 3 பிரதிவாதிகள் பற்றிய விவரமும் தெரியவந்தது என்றும் மேலும் 1வது பிரதிவாதியின் சகோதரர்கள் சொல்லியதன் பேரில் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் இந்த வழக்கில் அனுதாபம் பெறும்பொருட்டு பொய்யாக சொல்கின்றேன் என்று சொன்னாலும் இல்லை என்னிடம் சி.எஸ்.ஆர் உள்ளது. என்னிடம் சி.எஸ்.ஆர் எதுவும் இல்லை என்றாலும் அவ்வாறு சி.எஸ்.ஆர் இருப்பதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த வகையில் எனக்கும் 1வது பிரதிவாதிக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது என்றால் அவர் பேருந்துஓட்டுநராக பணி செய்து வந்தபோது பழக்கம் ஏற்பட்டது. விழுப்புரம் முதன்மை நீதிமன்ற அசல் வழக்கு எண் 14/2014 என்ற வழக்குபற்றி 1வது பிரதிவாதி சகோதரர்கள் சொல்லியதன் பேரில் தான் எனக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரி. 1வது பிரதிவாதி எனக்கு குழந்தை பிறக்கும் முன்பிருந்தே என்னுடன் வசித்து வந்தார் என்றால் இல்லை என் வீட்டிற்கு வருவார் போவார் என்னுடன் வசித்து வரவில்லை. நான் காலை 6 மணியளவில் GH க்கிற்கு பணிக்கு செய்துவிடுவேன் மாலை 7 மணிக்கு பிறகு தான் எனது பணியை முடித்துவிட்டு வருவேன். 1வது பிரதிவாதி என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றாலும் இந்த வழக்கிற்காக 1வது பிரதிவாதி வருவார் போவார் என்று

பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன். 2, 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த ஆட்சேபனையை நான் படித்து பார்த்துள்ளேனா என்று சொன்னால் படித்து பார்க்கவில்லை. 2, 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் குறித்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதால்தான் எனது பிரமாண வாக்குமூலுத்தில் அதனை மறுத்து சாட்சியம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 1வது பிரதிவாதியின் பூர்வீக சொத்தில் வாதிக்கு பாகம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றுசொன்னால் ஞானசேகர் என்பவர் பெயரில் இருந்தது அதன்பின்னர் 1வது பிரதிவாதிக்கு அந்த சொத்து கிடைக்கப்பெற்றது. 17.12.2008 ம் தேதி 1வது பிரதிவாதிக்கும் அவரது சகோதரருக்கும் இடையே பாகம் ஏற்பட்டது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரி. வா.சா.ஆ 1ல் 2 வது பக்கத்தில் 3 வது வரியில் பூர்வீக சொத்துக்களின் வருமானத்தை கொண்டு குடும்ப தலைவர் என்ற முறையில் 1வது நபர் ஞானசேகர் என்பவரது பெயரில் கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி. அதே பத்திரத்தில் 3 வதுபக்கத்தில் 3 வது பத்தியில் 2 வரியில் நம்முடைய தகப்பனார் காலம் சென்ற கண்ணப்பக்கவுண்டர் அவர்களுக்கு பூர்வீக பாத்தியமானதும் பட்டாவால் கிடைக்கப்பெற்று அனுபவித்து வந்த மேற்படி நம்முடைய தகப்பனார் காலம் சென்ற பிறகு இதன் அடியில் கண்டுள்ள சொத்தை நாம் அனைவரும் பொதுவாகவும் கூட்டாகவும் அனுபவித்து வந்தோம் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி. அந்த வகையில் வாதி பூர்வீக சொத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் இல்லை தேவநாதன் என்பவரது பெயரில் தனியாக சொத்து ஏற்பட்டுள்ளது. அந்த சொத்து தான் தேவநாதன் என்பவருக்கு பாகமாக வந்த சொத்து என்றால் சரி. வாதி எனக்கும் 1வது பிரதிவாதிக்கும் சட்டமுரணாக பிறந்துள்ளதால் அவருக்கு பூர்வீகசொத்தில் எந்த வித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1வது பிரதிவாதியும் 3 வது பிரதிவாதியும் நாளது வரை சட்டப்படியாக விவாகரத்து பெறாத காரணத்தினால் அவர்கள் இருவரும் தான் கணவன் மனைவி என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நாளது வரையில் 1வது பிரதிவாதியும் 3 வது பிரதிவாதியும் சட்டப்படியாக விவாகரத்து பெறாத காரணத்தினாலும் நானும் எனது முதல் திருமணத்திலிருந்து சட்டப்படியாக விவாகரத்து பெறாத காரணத்தினால் இந்த

வழக்கினை தாக்கல் செய்ய எந்த முகாந்திரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.1வது பிரதிவாதி அசல் வழக்கு எண். 14/2014 என்ற வழக்கினை முறையாக வழக்காடி மேல்முறையீட்டினை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திலும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் வழக்கு விவரம் எனக்கு முழுமையாக தெரியும் என்றும் தெரிந்துகொண்டே நான் பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.தாவா 4 வது இன சொத்து 2 வது பிரதிவாதியின் நலனுக்காக 1வது பிரதிவாதியால் 4 வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்று நான் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. 1 வது பிரதிவாதி என்னுடன் தான் இருந்தார் என்பதால் 3 வது, 2 வது பிரதிவாதியின் நலனுக்காக அதனை 4 வது பிரதிவாதிக்குவிற்பனை செய்தார் என்பது ஏற்றுக்கொள்ளுமாறு இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த தொகையை எனக்கு தான் செலவு செய்தார் என்றாலும் 2, 3 வது பிரதிவாதிக்கு செலவு செய்யவில்லை என்று சென்னாலும் சரியல்ல. 1வது பிரதிவாதி இன்று வரையில் என்னுடன் தான் வசித்து வருகிறார்ள ன்றாலும் 2, 3 வது பிரதிவாதிகளுக்கு தொந்தரவு கொடுக்கும் வகையில் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.நீதிமன்றத்தால் முறையாக பகரப்பட்ட தீர்ப்பாணை செல்லத்தகுந்தது அல்ல என்று நான் கோரியுள்ள பரிகாரம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.நான் இந்த வழக்கில் கோரியுள்ளவாறு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram